1983 பிப்ரவரி 11]

Vehicles to Labour Courts Judges.

* Q. No. 233—Thiru J. HEMACHANDRAN : Will the Hon. the Minister for Labour be pleased to state. .

(a) Whether Government vehicles have been provided for the Judges of Labour Courts : and

(b) if not, whether steps will be taken by the Government to provide vehicl to them ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை. (ஆ) மாவட்ட கூடுதல் நீதிபதிகளாகவும் தொழில் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாய நடுவர்களாகவும் மற்றும் உயர்நீதி மன்ற பதிவாளராகவும் பணிபுரியும் மாவட்ட நீதிபதி நிலைமையில் உள்ள நீதித்துறை அலுவலர்களின் உபயோகத்திற்காக வாகனம் கொடுப்பது பற்றி கருத்து அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஒரு தொழில் நீதிமன்றத்தில் 4 மாவட்டங்கள், 5 மாவட்டங்களில் உள்ள கேஸ்கள் நடக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு மாவட்டத்திற்கு அவர்கள் ஒரு கேம்ப் கோர்ட்டாக மாதத்திற்கு ஒரு தடவைதான் வந்துகொண்டிருக்கிறார்கள். அதிலேயும் பல பழைய ரிஜிஸ்டர்கள் எவிடென்சாக மார்க் பண்ணக்கூடிய நேரத்திலே அந்த ரிக்கார்டுகள் கொண்டு போவதற்கு வசதியில்லை என்று சொல்லி பல நேரங்களிலே, பல ரிக்கார்டுகள் இல்லாமல் சாட்சிகளை விசாரிக்க முடியாமல் வாய்தா கேட்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நாகர்கோவிலிலிருந்து மதுரைக்கு வந்து வழக்கு நடக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே இப்படி தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளிலே காலதாமதம் ஏற்படுவதற்கு காரணமாக இருப்பதாலே இந்த நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கு வாகனம் கொடுப்பதற்கு அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கூடுமான வரையில் தாமதம் இல்லாமல் தான் இருக்கிறது. எங்கே அதிகமாக வழக்குகள் தேங்கியிருக்கின்றன என்று கருதப்படுகிறதோ அந்தப் பகுதியில் கூடுதலாக தொழில் நீதிமன்றங்கள் நியமிக்கப்படுகிறது. உதாரணமாக கூடுதல் தொழில் நீதிமன்றம் மதுரைக்கு 6 மாதத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. எனவே வழக்குகள் அதிகம் தேங்கிவிடாமல் பார்ப்பதற்கு அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல வாகனம் கொடுப்பதற்கு அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூடுதல் நீதிமன்றம் நியமிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் அந்த நீதிமன்றத்தினுடைய தலைமை ஸ்தாபனம் மதுரைதான். ஆகவே கூடுதல் நீதிமன்றம் நியமிக்கப்பட்டாலும் இந்த அடிப்படையான பிரச்னைகளுக்கு ஒரு தீர்வு ஏற்படவில்லை. அதுமட்டுமல்ல, பத்திரிகையிலே கூட படித்தோம். மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு கூட வாகனம் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னதாக. ஆகவே அந்தப் பின்னணியில் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு வாகனம் கொடுப்பதற்கு முன்னாலே இந்தத் தொழில் நீதிமன்ற நீதிபதிகளுக்கு வாகனம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு வாகனம் கொடுப்போமேயானால் நம்முடைய கேஸ்கள் ரொம்ப ஸ்ட்ராங்காகிவிடுகிறது. எனவே அதைக் காண்பித்து தொழிற்சங்கத் தலைவர்கள் என்ற முறையில்—எனக்கு அனுபவம் இருக்கின்ற காரணத்தால்—இங்கே இருக்கக்கூடிய பிரைசைடிங் ஆபீசர்களுக்கு வாங்குவதற்கு சுலபமாக இருக்கும். அப்படி அது வந்துவிட்டால் அதையும் வாங்கலாம். ஆனால் இப்போதே, அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. மதுரையிலே ஏற்கனவே தொழில் நீதிமன்றம் இருக்கிறது. அதினால் ஆக மதுரையிலே இன்னொன்று போட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அதை திருநெல்வேலி போன்ற இடங்களில் இருக்கவேண்டுமென்று கருதுகிறார்கள் என்று கருதுகிறேன். இவைகளில் எல்லாம் வழக்குகள் தேங்கி விடும் என்ற அச்சம் ஏற்படுமானால் அப்பேற்பட்ட யோசனைகளைப் பரிசீலனை செய்யலாம்.

Gunampallam Ajjanahalli Tank in Pennagaram taluk.

* Q No. 200 THIRU T. VENKATA REDDY ; Will the Hon. the Minister for irrigation be pleased to state—

(a) whether the Government will take up the construction of " Gunampallam Ajjanahalli Tank " in Pennagaram Taluk, Dharmapuri District ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) தருமபுரி மாவட்டம், கூனம்பள்ளத்தின் குறுக்கே மூங்கில்மடுவு கிராமத்தின் அருகில் ஒரு ஏரி அமைப்பதற்கு அரசு ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. சில வேலைகளும் நடந்துள்ளன

(ஆ) இத் திட்டத்திற்கான திருத்திய மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்து இருக்கிறது.